**பயிலரங்கத் தொடர் எண்ணிக்கை: 123** **நாள்: 21.05.2026**

**செம்மொழித் தமிழ் மின் நூலகம்**

நடத்தும்

# செம்மொழித் தமிழும் செயற்கை நுண்ணறிவும்:

# புதிய ஆய்வுப் பரிமாணங்கள் (இணைய வழி)

## Classical Tamil and Artificial Intelligence:

## New Dimensions of Research (Online)

**ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி**

(Faculty Development Programme)

**பயிலரங்கம் - 4**

(03.06.2026 - 09.06.2026)

**அறிவிப்பும் அழைப்பும்**

உலகம் இன்று செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) தொழில்நுட்பத்தின் மூலம் புதிய அறிவியல் மற்றும் தகவல் பரிமாற்ற யுகத்தை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறது. மனிதர்களின் அன்றாட வாழ்க்கை முதல் கல்வி, மருத்துவம், நிர்வாகம், ஊடகம், மொழியியல், அறிவியல் ஆய்வு போன்ற அனைத்துத் துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழலில், உலகின் தொன்மைமிக்க செம்மொழிகளில் ஒன்றான தமிழ்மொழிக்கும் புதிய பரிமாணங்களும் வளர்ச்சி வாய்ப்புகளும் உருவாகி வருகின்றன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மாறிவரும் இந்த அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மொழிசார்ந்த பல்வேறு ஆய்வு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, ஓலைச் சுவடிகள், தாட்சுவடிகள், அரிய பழம்பதிப்பு நூல்கள் ஆகியவற்றை எண்ணிமமாக்கல் (Digitization), எழுத்துணரியாக்கம் (OCR), அலைபேசிச் செயலி உருவாக்கம் (Mobile App), செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையில் ஒலிநூல் உருவாக்கம் (Audio Book), காணொளி உருவாக்கம் ஆகிய பணிகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு ***செம்மொழித் தமிழும் செயற்கை நுண்ணறிவும்: புதிய ஆய்வுப் பரிமாணங்கள்*** என்னும் பொருண்மையில் அமைந்த பயிலரங்கை **இணைய**

**வழி**யில் நடத்த செம்மொழித் தமிழ் மின் நூலகம் திட்டமிட்டுள்ளது. பயிலரங்கில் இத்துறை சார்ந்த அறிஞர்கள் பயிற்றுரை வழங்க உள்ளனர்.

இப்பயிலரங்கு 03.06.2026 முதல் 09.06.2026 முடிய 07 நாட்கள் இணைய வழியில் நடைபெறவுள்ள நிலையில் **நிறுவனம், பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள்** மட்டும் கலந்து கொண்டு பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

<u>**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**</u>

- ❖ பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **50.**
- ❖ பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: **03.06.2026 முதல் 09.06.2026 வரை 7 நாட்கள்.**
- ❖ பயிலரங்கு நேரம்: **காலை 10.00 – 11.00., 11.15 - 12.15.**
- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/3HLLmz8iXT6xh5rE9 என்ற இணைப்பின் விழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 31.05.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் எற்கப்படமாட்டா.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 01.06.2026 அன்று மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 14 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாகக் கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.
- ❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**